OS.No. 143/2018

Dated : 13.03.2024

Time: 12.55 p.m to 01.00 p.m

P.W- 1 சாட்சி ரவீந்திரன் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதிகள் சார்பாக குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1) 1ம் வாதி என்னுடைய தந்தை வழி பாட்டி ஆவார். அவருடைய மகன் தான் என் தகப்பனார் சங்கர். மேற்படி வாசாஆ.1 கிரய ஒப்பந்த பத்திரத்தில் நான் தரப்பினர் இல்லை. எனவே மேற்படி ஆவணத்தை ரத்து செய்ய பரிகாரம் கோரும் உரிமை எனக்கு இல்லை என்றால் சரியல்ல. மேற்படி சொத்து 1ம் வாதிக்கு தான் பாத்தியப்பட்டது. தாவாவிலும், என்னுடைய பிரமாண வாக்குமூலத்திலும் நான் சொல்லியுள்ள விவரங்கள் பொய்யானவை என்றால் சரியல்ல. என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் நான் எவ்வித ஆவணமும் வழக்கில் கண்டுள்ளவாறு பிரதிவாதிகள் வசம் ஒப்படைக்கவே இல்லை என்றால் அது தவறு. என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் அது தவறு.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."

Sd/-K.Ananthan

**Subordinate Judge,**

**Attur.**